ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2024.01.23

**நாணயக்கொள்கை மீளாய்வு: இல. 01 - 2024 சனவரி**

**இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுகின்றது**

*இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபையானது 2024 சனவரி 22ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 9.00 சதவீதம் மற்றும் 10.00 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளின் அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வொன்றினைத் தொடர்ந்து, நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தில் பேணுகின்ற வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மட்டத்தினை அடைவதனை இயலச்செய்யும் பொருட்டு சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது. வரிவிதிப்பு மற்றும் நிரம்பல் பக்க காரணிகள் என்பவற்றின் அண்மைய அபிவிருத்தித் தாக்கங்கள் பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தங்களைக் குறுங்காலத்தில் தோற்றுவிக்கக்கூடுமென்பதனை சபை கருத்திற்கொண்டது. இருப்பினும், இவ்வபிவிருத்திகளின் தாக்கம் நடுத்தர காலப் பணவீக்கத் தோற்றப்பாட்டினைப் பெருமளவு மாற்றியமைக்காதென சபை கருதியது. மேலும், கடந்த கால நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளினால் உருவாக்கப்பட்ட இடைவெளி மற்றும் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் மேலும் கீழ்நோக்கிய சீராக்கத்திற்காக அரச பிணையங்களுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையின் வீழ்ச்சி என்பவற்றினை சபை கருத்திற்கொண்டது. சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களை மேலும் குறைப்பதிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களின் மூலம் போதியளவிலும் விரைவாகவும் ஊடுகடத்தப்பட வேண்டுமென்பதனை சபை வலியுறுத்தியது.*


**வரிச் சீராக்கங்கள் மற்றும் நிரம்பல் பக்க இடையூறுகளின் தாக்கங்கள் அண்மித்த காலத்தில் இல்லாதொழியுமென எதிர்பார்க்கப்படுவதனால் பணவீக்கமானது விரும்பத்தக்க மட்டங்களில் உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கமானது 2023 நவெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் 4.0 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. தொடர்ச்சியாக ஐந்தாவது மாத பணவீக்க வீழ்ச்சியினைத் தொடர்ந்து, உணவு வகையானது 2023 திசெம்பரில் பணவீக்கத்தினைப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்தமையானது வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளை முக்கியமாகப் பிரதிபலித்த வேளையில் உணவல்லா பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மிதமடைந்தது. அண்மைய துரிதப்படுத்தலிற்கு மத்தியில், முதன்மைப் பணவீக்கமானது மத்திய வங்கியின் பணவீக்க இலக்கிற்கு நெருக்கமாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன் மத்திய வங்கியின் எதிர்பார்க்கப்படுகின்ற பணவீக்க எறிவுகளுடன்

பெரும்பாலும் இசைந்து செல்லும் விதத்தில் காணப்படுகின்றது. அதேவேளை, மையப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டமையானது பொருளாதாரத்தின் மெதுவடைந்த கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலித்தது. 2024 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பெறுமதி சேர் வரியில் மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பு மற்றும் குறித்த சில பெறுமதி சேர் வரி விலக்கல்களின் நீக்கம், உள்நாட்டு உணவு நிரம்பலிற்கான இடையூறுகள் மற்றும் சாதகமான புள்ளிவிபரத் தளத் தாக்கத்தின் இல்லாதொழிதல் என்பன காரணமாக உள்நாட்டு விலைச் சீராக்கங்களினால் முக்கியமாக உந்தப்பட்டு, முன்னர் எதிர்பார்க்கப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது மேல்நோக்கிய அசைவொன்றினைக் குறுங்காலத்தில் பதிவுசெய்யுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அண்மைய காலத்தில் பணவீக்கத்தின் இத்துரிதப்படுத்தலானது குறுகிய காலத்திலானதாயமையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் மெதுவடைந்த அடிப்படைக் கேள்வி அழுத்தங்களின் காரணமாக அத்தகைய ஒரே தடவையிலான சீராக்கங்களின் கசிவுத் தாக்கங்கள் குறைவடையக்கூடும். ஆதலால், நடுத்தர காலத்தில், முதன்மைப் பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தினை (ஆண்டிற்கு ஆண்டு) அண்மித்துப் படிப்படியாக உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**

**கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, சதவீதம்)**




*மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்*

***குறிப்பு**: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான உண்மையான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2024 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன .

*வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது.*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2024 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவையை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதமாக எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீத பாதை மற்றும் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து உண்மையான பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

தற்போதுள்ள உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள், பாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில், தற்போதைய எறிவுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். எறிவுகளில் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஏற்கனவே உட்புறப்படுத்தப்பட்ட மட்டங்களிலிருந்து விலகுகின்ற பல்வேறு காரணிகளின் சாத்தியத்தன்மை மற்றும் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் அபிவிருத்திகள் என்பன காரணமாக இவ்விடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றன. குறிப்பாக, அதிகரித்த வரிவிதிப்பின் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அதிகளவிலான இரண்டாம் சுற்றுத் தாக்கங்களின் சாத்தியப்பாடு, சாத்தியமான கூலி உயர்வுகள், வேளாண்மை உற்பத்தி மீதான சாத்தியமான பாதகமான வானிலையின் தாக்கம் மற்றும் அதன்மூலம் ஏற்படக்கூடிய உணவுப் பணவீக்கம், குறிப்பாக, தளம்பலடைகின்ற புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் உலகளாவிய எண்ணெய், வலு மற்றும் உணவு விலைகள் மீதான நிச்சயமற்றதன்மை போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, இறக்குமதிகளிலிருந்தான அதிகரித்த போட்டித்தன்மை மற்றும் பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவுச் சக்தியின் தொடர்ச்சியான தாக்கம் என்பவற்றிற்கு மத்தியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களில் விலைக் குறைவுகளின் சாத்தியப்பாடு என்பது பணவீக்க எறிவுகளிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளில் உள்ளடக்கப்படுகிறது.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமானதோர் அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடனுள்ளது.

## சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் மேலுமொரு வீழ்ச்சி எதிர்வருகின்ற காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்றது

ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களைக் குறைக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை மற்றும் நிர்வாக வழிமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டன. மேலும், வீழ்ச்சியடைகின்ற இடர்நேர்வு மிகையினால் ஆதரவளிக்கப்பட்டு அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக, கடன்வழங்கல் வட்டி வீதங்கள் மற்றும் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் என்பன அண்மைய காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வட்டி வீதங்களின் குறைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்வருகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடைவதற்கு மேலும் இடைவெளி காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபை கருதுகின்றது. அதேவேளை, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் ஊடுகடத்தலினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், வங்கித்தொழில் துறையின் மூலமான தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடனானது 2023 நவெம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் மாதாந்த அடிப்படையொன்றில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. நாணய நிலைமைகளின் மேலதிக தளர்வடைதலினால் ஆதரவளிக்கப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கமானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் நீடித்துநிலைத்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையானது மீட்சியினை நடுத்தர காலத்தில் நீடித்து நிலைத்திருக்கச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது

தொடர்ச்சியாக ஆறு காலாண்டுகளைக் கொண்ட பொருளாதாரச் சுருக்கத்தினைத் தொடர்ந்து 2023இன் மூன்றாம் காலாண்டில் இலங்கைப் பொருளாதாரம் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கமைய,

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், பொருளாதாரமானது 2023இன் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் என்பவற்றில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட விரிவாக்கங்களினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் பரந்த அடிப்படையிலான விரிவாக்கமொன்றாகக் காணப்பட்டது. பரந்தளவிலான சந்தை வட்டி வீதங்களுக்குத் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் விரைவான ஊடுகடத்தல் மற்றும் கொடுகடன் கேள்வியின் அதன் விளைவான உறுதியடைதல், வியாபாரங்கள் மற்றும் முதலீட்டாளர் மனோபாவங்களில் மேம்பாடுகள், நிரம்பல் நிலைமைகளில் மேம்பாடுகள் மற்றும் வெளிநாட்டுக் கேள்வி நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் படிப்படியான மீளெழுச்சி என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் மீளெழுச்சியானது நிலைபேறானதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டுத் துறையானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது**

வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2022 உடன் ஒப்பிடுகையில் 2023 காலப்பகுதியில் மிதமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது பணிகளின் வர்த்தகத்தில் முக்கியமாக, சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் குறிப்பிடத்தக்க மீட்சி மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் வலுவான உத்வேகம் என்பவற்றுடனிணைந்து 2023இற்கான நடைமுறைக் கணக்கு மீதியில் மிகையொன்றினைத் தோற்றுவித்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கி 2023 திசெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிற்குக் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இவ்வலுவான மீளெழுச்சியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கொள்வனவுகள் மற்றும் பல்புடை முகவராண்மைகளிலிருந்தான பெறுகைகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது. 2023இல் ஐ.அ.டொலரிற்கெதிராக ஏறத்தாழ 12 சதவீதத்தினால் உயர்வடைந்த இலங்கை ரூபாவானது 2024இன் இதுவரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கெதிராக உயர்வொன்றினைத் தொடர்ந்தும் காட்டியது.

**கொள்கை வட்டி வீதங்கள் அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, 2023 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட இறுதி நாணயக் கொள்கை மீளாய்வில் வழங்கப்பட்ட முன்னோக்கிய வழிகாட்டலிற்கமைவாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபையானது 2024 சனவரி 22ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 9.00 சதவீதம் மற்றும் 10.00 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்தது. கடந்த கால நாணயக்கொள்கைத் தளர்வடைதல்

வழிமுறைகள் மற்றும் அரச பிணையங்களுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையின் வீழ்ச்சி என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கிச் சீராக்கப்படுவதற்கான இடைவெளி காணப்படுவதாக சபை அபிப்பிராயப்பட்டது. குறிப்பாக, 2023 யூனிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக்கொள்கைத் தளர்வடைதல் வழிமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் பரந்த அடிப்படையிலான குறைவொன்றினை சபை எதிர்பார்க்கின்றது. நாணயக்கொள்கைச் சபையானது ஏனையவற்றிற்கிடையில் பணவீக்க எறிவுகளிற்கான இடர்நேர்வுகளைத் தொடர்ந்தும் மதிப்பீடு செய்து, எதிர்வருகின்ற காலப்பகுதியில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளும் வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடைவதற்கு ஆதரவளிக்கத் தயாராகவிருக்கும்.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் மாற்றமடையவில்லை** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 9.00% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 10.00% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2024 சனவரி 23ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீளாய்வு மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2024 மாச்சு 26ஆம் நாளன்று வெளியிடப்படும்.

* **தரவு இணைப்பினை** https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/mpr01_2024_t.pdf இனூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.